III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.No.490/2022

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Thiru.P.Kothandaraman, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 24-06-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : V.Dinesh Kumar | Village | : |
| Father's Name | : Vedhanayagam | Calling | : |
| Age | : | Taluk | : |

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் முதலாம் வாதி. நான் சொல்லக் கூடிய சங்கதிகளை சத்திய பிரமாணம் செய்து எழுத்து பூர்வமாக தாக்கல் செய்கிறேன். அதை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். மேலும் எனது தரப்பில் 13 ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். 24.11.2012 தேதியிட்ட வாடகை ஒப்பந்தம் (அது வா.த,சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). **12.08.2016 தேதியிட்ட எனது பெயரில் உள்ள செட்டில்மென்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல்** (அது வா.த,சா. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).

**12.08.2016 தேதியிட்ட இரண்டாம் வாதி பெயரில் உள்ள செட்டில்மென்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல்** (அது வா.த,சா. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது). **எனது வங்கிக் கணக்கின் பட்டியல்** (அது வா.த,சா.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).. **இரண்டாம் வாதியின் வங்கிக் கணக்கின் பட்டியல்** (அது வா.த,சா.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது). **11.01.2021 தேதியிட்ட எனக்கும் முதலாம் பிரதிவாதிக்கும் இடையேயான வாடகை ஒப்பந்தம்** (அது வா.த,சா.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது). **11.01.2021 தேதியிட்ட இரண்டாம் வாதிக்கும் முதலாம் பிரதிவாதிக்கும் இடையேயான வாடகை ஒப்பந்தம்** (அது வா.த,சா.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது). **தாவா சொத்திற்கான சொத்து வரி ரசீது** (அது வா.த,சா.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது). **அம்பத்துூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதலேற்பு வழக்கு எண்**.288/2021 **ன் வழக்குரையின் நகல்** (அது வா.த,சா.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது). 26.07.2022 **அன்று நாங்கள்**

**பிரதிவாதிகளுக்கு அனுப்பிய சட்டப்பூர்வ அறிவிப்பின் அலுவலக நகல்** (அது வா.த,சா.**10** ஆக குறியீடு செய்யப்படுகிறது). **அதை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டைகள் (எண்ணம் 3)** (அது வா.த,சா.**11** ஆக குறியீடு செய்யப்படுகிறது). **தாவா சொத்திற்கு செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீதின் நகல்** (அது வா.த,சா.**12** ஆக குறியீடு செய்யப்படுகிறது). **தாவா சொத்தை காட்டும் புகைப்படங்கள் மற்றும் அவை அடங்கிய குறுந்தகடு மற்றும் அவற்றை எடுத்தற்கான பில்,** (அது வா.த,சா.**13 வரிசையாக** குறியீடு செய்யப்படுகிறது). அவற்றின் விவரங்கள் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் இந்த வழக்கில் கேட்டுள்ளபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).